(Under Section 173 BNSS)
(BNSS பிரிவு 173 இன் கீழ்)

# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

~~(Under Section 154 Cr.P.C.)~~

~~(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)~~

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8129855

1. District : திருச்சி  PS: ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு  Year 2024  FIR No.: 9  Date 23.7.24
மாவட்டம்  காவல்நிலையம்  ஆண்டு  மு.த.அ. எண்  நாள்

2. (i) Act சட்டம்: PC Act 1988 (as amended in 2018)  Sections பிரிவுகள்: 7(a)
(ii) Act சட்டம்:  Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்:  Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்  Date from நாள் முதல் 22.7.24  Date to : நாள் வரை
Time Period : நேர அளவு  Time from : நேரம் முதல் 12.10  Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 23.7.24  Time : நேரம் 07.00
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்  Time : நேரம்

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலமாக (Computer typed)

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: சுமார் 2½ Km தென் கிழக்கு
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : முறைக் காவல் எண்  (b) Address : முகவரி குற்றமுறையீட்டாளரின் வீட்டு மனை எண் : 185 மதுரை வீரன் கோவில் தெரு [illegible] கொட்டப்பட்டு
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S :  District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்  மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : P. முனியப்பன்  (b) Father's/ Husband's Name :
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்  தந்தை / கணவர் பெயர் பொன்னையா
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 15.09.1964  (d) Nationality நாட்டினம் இந்தியன்  (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்  Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் மளிகைக்கடை  (g) Address : முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு. முருகேசன், சர்வேயர், கொட்டப்பட்டு, திருச்சி கிழக்கு தாலுக்கா

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

- தாமதமில்லை -

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்) —

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

P. முனியப்பன் 23.7.2024 G. [signature] 23.7.2024
(G. SARAVANAVEL)
Inspector of Police
VBAG
Trichy

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 23.7.2024
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் ..............................
Rank: நிலை ....................No. எண் ..........

**கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்குகள் சிறப்பு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி அவர்கள் முன்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது.**

**திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.9/2024–இன் முதல் தகவல் அறிக்கையின் காலம் 12ன் தொடர்ச்சி.......**

திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான், இன்று 23.07.2024 பணியில் இருந்த போது காலை 07.00 மணியளவில் திருச்சி, சுப்ரமணியபுரம், இந்திரகாந்தி தெரு, கதவு எண்38B என்ற முகவரியில் வசித்து வரும் பொன்னையா மகன் திரு.P.முனியப்பன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார்மனுவை பெற்று, அது குறித்து சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, இயக்குநரகத்திற்கு தெரிவித்து, அனுமதி பெற்று அந்த புகார்மனு குறித்து முதல் கட்ட விசாரணை ரகசியமாக செய்து, புகார்மனுவில் கூறப்பட்டுள்ள திருச்சி மாவட்டம், திருச்சி கிழக்கு தாலுகா கொட்டப்பட்டு சர்வேயர் திரு.முருகேசன் மற்றும் புகார்தாரர் திரு.P.முனியப்பன் ஆகியோர்களின் முன் நடத்தைகள் பற்றி இரகசிய விசாரணை செய்து எதிரியின் கெட்ட நடத்தையை உறுதி செய்துகொண்டு, பின்னர் இன்று 23.07.2024 காலை 09.00 மணிக்கு திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, குற்ற எண்.9/2024 சட்டப்பிரிவு 7(a) ஊழல் தடுப்பு சட்டம்–1988 (as amended in 2018)–ன் படி வழக்கு பதிவு செய்தேன். புகார்மனுவின் விபரம் பின்வருமாறு. திருச்சி 23.07.2024 அனுப்புனர் P.முனியப்பன், வயது 59, த/பெ. பொன்னையா, எண்.38பி, இந்திராகாந்தி தெரு, சுப்பிரமணியபுரம், திருச்சி. பெறுநர் காவல்துறை ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை அலுவலகம், திருச்சி மாவட்டம். ஐயா, நான் திருச்சி சுப்பிரமணியபுரத்தில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் எட்டாம் வகுப்புவரை படித்துள்ளேன். சுப்பிரமணியபுரத்தில் மளிகைகடை வைத்து நடத்தி வருகிறேன். நான் திருச்சி கொட்டப்பட்டு மதுரைவீரன் கோவில்தெரு விஸ்தரிப்பு–4 என்ற மனைப்பிரிவில் மனை எண் 185ல் 1200 சதுரடி அளவுள்ள மனையினை திருச்சி பனையக்குறிச்சி நடுத்தெருவைச் சேர்ந்த ரெங்கராஜ் மனைவி சுதா என்பவரிடமிருந்து எனது பெயருக்கு கடந்த 12.6.2024 அன்று கே.கே.நகர் ரிஜிஸ்டர் ஆபீசில் பத்திர எண்.3611/2024ன்படி பத்திரப்பதிவு செய்து கொண்டேன். நான் வாங்கிய மேற்படி மனையானது சேதுராமன் என்பவரின் பெயரில் பட்டா இருந்ததால் எனது பெயருக்கு உட்பிரிவு செய்து பட்டா பெயர் மாற்றம் செய்ய வேண்டி இ–சேவை மையத்தின் மூலமாக கடந்த 11.7.2024 அன்று உரிய ஆவணங்களை இணைத்து விண்ணப்பம் செய்தேன். நான் விண்ணப்பித்து ஒரு மாதத்திற்கு மேலாகியும் எனக்கு எந்த தகவலும் கிடைக்கப் பெறாததால் கடந்த வெள்ளிக்கிழமை அதாவது 19.7.2024, அன்று மதியம்போல திருச்சி கிழக்கு தாலுக்கா ஆபீசுக்கு போய் விசாரித்ததில், கொட்டப்பட்டுக்கு உண்டான சர்வேயர் முருகேசன் இப்ப வெளி வேலையா எங்காவது இருப்பார், நீங்க அவரத்தான் பார்க்கனும், அவர நேர்ல பாருங்க இல்லன்னா அவருக்கு போன்ல பேசுங்க என்று அங்கிருந்த ஒருவர் சொன்னார். அவ்வாறு சொன்ன நபரிடம் சர்வேயர் முருகேசனின் போன் நெம்பரை கேட்டு வாங்கிக் கொண்டு வீட்டுக் வந்து விட்டேன். பின் இன்று 22.7.2024 காலை சுமார் 10.15 மணிக்கு நான் எனது செல்போனில் இருந்து சர்வேயர் முருகேசனின் செல்போன் எண்ணுக்கு

தொடர்பு கொண்டு எனது மனுகுறித்து தெரிவித்தேன். அப்போது அவர் ஆமாம், உங்கமனு என்கிட்ட பெண்டிங்லதான் இருக்கு, நீங்கதான் என்ன வந்து பாக்கவேயில்ல என்று சொல்லிவிட்டு நான் வாங்கிய மனையின் விலாசத்தை கேட்டு வாங்கிக் கொண்டு இன்னைக்கு உங்க மனையை அளந்திடலாம் பதினொன்றரைமணிக்கு உங்க மனைக்கு டாக்குமென்ட்டோட வந்திடுங்க நான் அங்க வந்திடுறேன் என்று சொன்னார். அதன்படி நான் சரியாக பதினொன்றரை மணிக்கு கொட்டப்பட்டில் உள்ள நான் வாங்கியமனைக்கு சென்று காத்திருந்தேன். அப்போது எனது செல்போனுக்கு சர்வேயர் முருகேசன் பேசி, மனைக்கு வந்திட்டீங்களா என்று கேட்டார்.நான் வந்துவிட்டேன் என்று சொன்னதும், நானும் பக்கத்தில் வந்திட்டேன் வெயிட் பண்ணுங்க என்று சொன்னார். நான் காத்திருந்தேன் அப்போது மதியம் சுமார் 12 மணிக்கு சர்வேயர் முருகேசன் மட்டும் அங்கு வந்தார். என்னிடமிருந்த பத்திர ஆவணங்களை வாங்கி பார்த்துவிட்டு அளவெல்லாம் சரியா இருக்கு, 2003-க்கு அப்புறம் பட்டா பெயர் மாற்றமே செய்யாமல் இருக்கே, இது ரொம்ப பெரிய வேலையாச்சே என்று கூறினார். அதற்கு நான் டாக்குமென்ட் எல்லாம் சரியா இருக்குதே சார், பாத்து வேலைய முடிச்சி கொடுங்க சார் என்று கூறினேன். அதற்கு அவர், அப்படின்னா எனக்கு தனியா 15 ஆயிரம் கொடுத்திடுங்க உங்க வேலைய சிரமம் இல்லாம முடிச்சி கொடுத்திடுறேன் என்று சொன்னார். அதற்கு நான், சார் நானே சின்ன மளிகைகடை வைத்து, எனது குடும்பத்தையும் நடத்திக் கொண்டு, கடன் வாங்கிதான் இந்த இடத்தையே வாங்கியுள்ளேன், இவ்ளோ பெரிய தொகையா கேக்குறீங்களே என்றேன். அதற்கு அவர், இந்த ஏரியாவ பொருத்தவரைக்கும் எல்லாரிடமும் 15,000 ரூபா தான் வாங்குறது, நீங்க இவ்ள சொல்றதால 5 ரூவா கொறச்சி பத்தாயிரம் கொடுத்திடுங்க என்று வற்புறுத்தினார், அதுக்கு மேல கொறக்கணும்னு கேக்காதீங்க, இல்லன்னா உங்களுக்கு வேல ஆகாது, நாளைக்கே கொண்டாந்து கொடுத்திடுங்க, சீக்கிரமே உங்க வேலைய முடிச்சி கொடுத்திடுறேன் என்று சொன்னார். எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பமில்லை, இருந்தாலும், அப்போதைக்கு அவரிடம், சரிங்க சார் பணம் ரெடிபண்ணிட்டு நாளைக்கு வந்து பார்க்கிறேன் என்று சொல்லிவிட்டு அங்கிருந்து வந்துவிட்டேன். எனது பெயருக்கு உட்பிரிவு செய்து தனிப்பட்டா கிடைக்க ஏற்பாடு செய்வதற்கு ரூ.10,000/- லஞ்சம் கேட்ட திருச்சி கிழக்கு தாலுக்கா, கொட்டப்பட்டு சர்வேயர் முருகேசன் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, Sd.xxx (P.முனியப்பன்) 23.7.2024 Submitted to the Court of Hon'ble Special Judge, Special Court for Prevention of Corruption Act 1988, Trichy. Received this report at 07.00 hrs. on 23.07.2024 and obtained permission from the DVAC, made Preliminary Enquiry and registered a case in Trichy V&AC Cr.No.9/2024 u/s 7(a) of the Prevention of Corruption Act-1988 (as amended in 2018) at 09.00 hrs. on 23.07.2024. Sd.xxx (G.SAKTHIVEL) *23.07.2024 Inspector of Police, V&AC, Trichy.*

G. [signature] 23.7.2024
[G. SAKTHIVEL]
Insp. of Police,
V&AC
TRICHY.